DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 93/2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பன்னீர்செல்வம் | Father's/Husband's Name : நாகப்ப கவுண்டர் | |
| Village | : புள்ளிமான்கோம்பை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** வழக்கு விபரங்களை வழக்கறிஞருக்கு நாங்கள் தான் கூறினோம். தாவா சொத்துக்கு ஆதியில் கொண்டம்மாள் பெயரில் பட்டா தாக்கலாகி இருந்தது. கொண்டம்மாள் பெயரில் பட்டா இருந்த விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கொண்டம்மாள் பெயரில் பட்டா எந்த வருடம் ஏற்பட்டது என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கொண்டம்மாளின் கணவர் பெயர் நாகப்பகவுண்டர். அவர்களின் வாரிசுகள் காளப்ப கவுண்டர், கெப்ப ஒச்ச கவுண்டர் என்ற சங்கு கவுண்டர், வெள்ளைய கவுண்டர்,ஒ சுப்பையா கவுண்டர் ஆவார்கள். காளப்ப கவுண்டர் இறந்த தேதி மாதம் வருடம் எனக்கு தெரியாது. காளப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதலோ அல்லது அவர் இறந்ததை காட்ட வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான்.

2) கொண்டம்மாளின் மூத்த மகன் காளப்ப கவுண்டர். அவருக்கு அடுத்து கெப்ப ஒச்ச கவுண்டர் என்ற சங்கு கவுண்டர். கெப்பஒச்ச கவுண்டர் என்ற சங்கு கவுண்டருக்கு 2 ஆண் வாரிசுகள் உள்ளனர். பொன்னைய கவுண்டர், நாகப்ப கவுண்டர். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தான் மேற்படி பொன்னையா கவுண்டரின் மகன். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகனாவார். 3, 4பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கிய நபர்கள். கடந்த 06.08.2021ம் தேதி பொன்னையா கவுண்டர் 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில 2 சர்வே எண்களில் கட்டுப்பட்ட நிலங்களை எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.78/3 ல் 96.67 செண்டும், சர்வே எண்.78/1 ல் 21.5 செண்டும் 1 ம் பிரதிவாதிக்கு தானம் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திர விபரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தான பத்திரமோ அல்லது அதை தொடர்ந்து பதியப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று விளம்புகை செய்யக் கோரி நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக் கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தின் அடிப்படையில் 3 ம் பிரதிவாதி பெயரில் தற்போது பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். அந்த பட்டாவின் அடிப்படையில் அவர்கள் தாவா சொத்தில் நுழைய முயற்சித்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா 2 வது லக்க சொத்திற்கு 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா **பி.வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சொத்தின் புலப்படம் **பி.வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 வது லக்க சொத்திற்கு தற்போது வரை 3 ம்பிரதிவாதி விஜயலட்சுமி பெயரில் தான் கிஸ்தி இரசீது செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு இன்று வரை சோளம், வெங்காயம் வைத்து விவசாயம் 3 ம்பிரதிவாதி தான் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம்.

5) 3 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விபரம் 2023 ம் ஆண்டு எனக்கு தெரிய வந்தது. அதன்பிறகு மேற்படி பட்டாவை ரத்து செய்ய எதுவும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்துக்களுக்கு எனது பெயரிலோ அல்லது 1 ம் வாதி சங்கர் பெயரிலோ ஆவணங்கள் எதுவும் இருந்ததா என்று கேட்டால் இல்லை, எனது

அப்பா பெயரில் இருந்தது. வா.சா.ஆ.3 பட்டா பொன்னையா ககவுண்டர் பெயரில் இருக்கிறது என்றாலும் நான் தவறாக எனது அப்பா பெயரில் இருக்கிறது என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, எனது அப்பா பெயரில் உள்ளது. பட்டாவை வக்கீலிடம் கொடுத்திருக்கிறேன். வா.சா.ஆ.1, 2 பட்டாக்களில் வாதிகள் அல்லது அவர்களது தகப்பனார் நாகப்ப கவுண்டர் பெயரோ இடம் பெறவில்லை என்று சொன்னால் பட்டா பாஸ் புக் தாக்கல் செய்திருக்கிறேன்.

6) வாதிகளின் பெயரிலோ அல்லது எங்களது அப்பாவின் பெயரிலோ தாவா சொத்திற்கான ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களது அனுபவத்தை காட்டக் கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கொண்டம்மாள் என்பவரின் கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் குறிப்பிட்டுள்ள ராமசாமி மனைவி கொண்டம்மாள் எங்களது பாட்டி இல்லை என்றால் சரிதான். நாகப்ப கவுண்டரின் வாரிசுகளை காட்டக் கூடிய இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாகப்ப கவுண்டர் தெப்ப ஒச்சக் கவுண்டரின் மகன் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த வருடம் முதல் எந்த பாக சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7) 1ம் வாதியின் வாரிசுகள் மகன்கள் 4 பேரும் எந்த பாகத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.78/3ல் மொத்தமுள்ள 2 ஏக்கர் 90 செண்டில் மேற்கு பக்கம் உள்ள 1 ஏக்கர் 94 செண்டும், சர்வே எண்.78/1ல் 43 செண்டும் கெப்ப ஒச்ச கவுண்ருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால்சரியல்ல. மேற்படி கெப்ப ஒச்ச கவுண்டர் இறந்த பிறகு அவரது மகன்களுக்கு பாகமாக கிடைத்து அவர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதில் சர்வே எண்.78/3ல் கீழ் பக்கமுள்ள 1 ஏக்கர் 97 செண்ட் மற்றும் 78/1ல் கீழ்பக்கமுள்ள 21.5 செண்டும் எனது தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதுஎன்றால் சரியல்ல, மொத்தம் 97 செண்ட் நிலம் தான் எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டது.

8) 1ம் பிரதிவாதி தந்தைக்கு பாகமாக கிடைத்த சொத்துக்கள் பொறுத்து அவர்கள் முறையாக பட்டா மாற்ற செய்து கொண்டு அதன் பிறகு 1ம் பிரதிவாதிக்கு

தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ள சொத்துக்களை பொறுத்து அவர்களுக்கு இடைஞ்சல் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 நபர்கள். நாகப்ப கவுண்ரின் அனைத்து வாரிசுகளையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நாகப்ப கவுண்டரின் வாரிசு விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன். தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லையென்றாலும் இந்தவழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்தவித உரிமை மூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரும் அவருக்கு பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9) அசல் வழக்கு எண்.35/2017 என்ற வழக்கில் வழக்கு நகல்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 03.09.2023ம் தேதி அன்று பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து புல்டவுசர் கொண்டு வந்து நிலத்தை உழுவதற்கு முயற்சி செய்தார்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**

Taken down by me/before me in open court on 23.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.01.23 12:28:19 +0530

District Munsif,
Aundipatti.